காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட இளைஞர் அணி மாணவர் அணி மகளிர் அணி மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்துகொண்டு உரையாற்றினார். அருகில் மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் உதயா கருணாகரன், மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் சசிகலா, மாவட்ட துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.

சேலம் மாவட்டம், சன்னியாசிகுண்டு குமரகிரி தண்டாயுதபாணி சுவாமி திருக்கோவில் மலைப்பாதை சீரமைத்தல் மற்றும் கோவில் திருமதில் அமைக்கும் பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் (04.09.2025) தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, மாநகராட்சி மேயர் ஆ. இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, அறங்காவலர்கள் குழுத்தலைவர் ஏ.ஏ.ஆறுமுகம், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திருமதி வே.சபர்மதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

“உங்களுடன் ஸ்டாலின்” திட்டம்! தமிழ்நாடு முழுவதும்

இதுவரை 5474 முகாம்களில் 43.70 இலட்சம் மனுக்கள் பெறப்பட்டுள்ளன!

அமைச்சர் மா.சுப்பிரமணியன் தகவல்!

சென்னை, செப்.6- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (04.09.2025) சென்னை, கிண்டி, லேபர் காலனி, அருளாயம்பேட்டை பிரதான சாலையில் உள்ள லயன்ஸ் கிளப் தொடக்கப் பள்ளியில் நடைபெற்ற “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, பொதுமக்களின் கோரிக்கைகளுக்கான தீர்வுகளை வழங்கினார். பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

“உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாம் ஆய்வு

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த ஜூலை திங்கள் 15ஆம் தேதி தமிழ்நாட்டில் “உங்களுடன் ஸ்டாலின்” எனும் புதிய திட்டத்தை தொடங்கி வைத்தார்கள். இந்த திட்டத்தைப் பொறுத்தவரை தமிழ்நாட்டின் நகர்ப்புற பகுதிகளில் 3768 முகாம் என்கின்ற இலக்கோடு 13 அரசு சேவை துறைகள் 43 வகையான சேவைகளை தருகின்ற வகையில் இந்த திட்டம் தொடங்கப்பட்டது.

ஊரகப்பகுதிகளைப் பொறுத்தவரை 6232 முகாம்கள், 15 துறைகளின் சார்பில் 36 வகையான சேவைகள். பெருநகர சென்னை மாநகராட்சி போன்ற நகர்ப்புற பகுதிகளில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, எரிசக்தித்துறை, கூட்டுறவு மற்றும் உணவு, நுகர்வோர் பாதுகாப்புத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் நலத்துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, சிறுகுறு மற்றும் நடுத்தர தொழில்நிறுவனங்கள் துறை, சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை,

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைத்துறை என்று 13 வகையான துறைகளின் சார்பில் 43 வகையான சேவைகள் வழங்கும் திட்டம் நகர்ப்புற பகுதிகளில் தொடங்கப்பட்டது.

ஒட்டுமொத்தமாக இந்த முகாம்களின் எண்ணிக்கை 10,000 என்கின்ற இலக்கோடு தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை கடந்த 2 மாதங்களில் நடத்தி முடிக்கப்பட்டுள்ள முகாம்களின் எண்ணிக்கை 5474. இந்த முகாம்களின் மூலம் பெறப்பட்டிருக்கும் விண்ணப்பங்கள் எண்ணிக்கை 43,70,449 ஆகும். பெரும்பாலான விண்ணப்பங்களுக்கு அந்தந்த முகாம்களிலேயே தீர்வு காணப்படுகிறது.

சென்னையில் உள்ள 200 மாநகராட்சி வார்டுகளில் ஒரு வார்டுக்கு 2 என்கின்ற வகையில் முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில் பெருநகர சென்னை மாநகராட்சியில் இதுவரை நடத்தப்பட்டுள்ள முகாம்களின் எண்ணிக்கை 202. இன்னும் 198 முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது.

இந்த முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகைக்கான விண்ணப்பங்களும் வழங்கப்படுகிறது. அந்த விண்ணப்பங்களை பூர்த்தி செய்து தரும் அளவிற்கு ஒவ்வொரு முகாம்களிலும் தன்னார்வலர்களும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த முகாம்களில் மாற்றுத்திறனாளிகளுக்கு உதவுகின்ற வகையில் 3 சக்கர வாகனங்களுடன் தன்னார்வலர்கள் பணியில் அமர்த்தப்பட்டிருக்கிறார்கள்.

வைரஸ் காய்ச்சல் தொடர்பான கேள்விக்கு

யாரும் பயப்படத் தேவையில்லை. பருவகால மழைக்காலங்களில் வருகின்ற நோய்த் தொற்றுகள் தான். புதிய நோய் பாதிப்புகள் எதுவும் இல்லை. அண்மையில் கேரளாவில் மூளையைத் திண்ணும் அமீபா என்னும் புதிய நோயினைப் பற்றி பரவலான பதட்டம் உருவாக்கப்பட்டது. இந்த நோய் பாதிப்பு குறித்து ஏற்கெனவே நான் பத்திரிக்கையாளர் சந்திப்பில் தெரிவித்திருக்கிறேன்.

மூளையைத் திண்ணும் அமீபா என்பது கேரளாவில் ஏராளமாக குளம், குட்டைகள், நீண்ட நாட்களாக தூர்வாரப்படாத நீர், குளங்களில் சேறு படர்ந்திருக்கும் நிலையில் குளங்களில் குளிப்பவர்களுக்கு அமீபா என்கின்ற வைரஸ் அவர்கள் குளிக்கும்போது மூக்கு வழியாக சென்று மூளையை பாதித்து பெரிய அளவில் மூளைக் காய்ச்சல் போன்ற பாதிப்புகள் ஏற்பட்டு உயிரிழப்புகள் ஏற்பட்டு வருகிறது.

இது கேரளாவில் ஏற்பட்டு இருக்கின்ற பாதிப்புகளில் ஒன்று. இது தொற்று நோய் பாதிப்பு அல்ல, என்றாலும் மக்கள் நல்வாழ்வுத் துறை சார்பில் அறிவிப்பது தமிழ்நாட்டில் கூட தூர் வாரப்படாத குட்டைகள், மாநகரப் பகுதிகளில் இருக்கின்ற நீச்சல் குளங்கள், நீண்ட நாட்களாக உள்ள மாசுப் படிந்த நீர் போன்றவற்றை சுத்தப்படுத்தி பயன்படுத்திக் கொள்ள வேண்டும், இதுதான் முன்னெச்சரிக்கை நடவடிக்கையே தவிர வேறு எதுவும் இல்லை. பெரிய அளவில் பாதிப்புகள் ஏற்படாது. பதட்டப்படத்தேவையில்லை.

உள்ளாட்சி அமைப்புகளோடு இணைந்து மக்கள் நல்வாழ்வுத்துறை பணியாளர்கள் மூலம் கண்காணிக்கப்பட்டு வருகிறது. தமிழ்நாட்டில் இதுவரை அந்த மாதிரியான பாதிப்பு தென்படவில்லை.

“நலம் காக்கும் ஸ்டாலின்” திட்டம் தொடர்பான கேள்விக்கு

“நலம் காக்கும் ஸ்டாலின்” எனும் திட்டம் ஒவ்வொரு சனிக்கிழமையும் தமிழ்நாட்டில் நடத்தப்பட்டு வருகிறது. அந்த திட்டம் கடந்த மாதம் 02ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் தொடங்கப்பட்டு தமிழ் நாட்டில் உள்ள 38 வருவாய் மாவட்டங்களில் ஒவ்வொரு வாரத்திற்கும் 38 முகாம்கள் என்கின்ற வகையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

முதல் வாரம் 38 முகாம்களும், இரண்டாவது வாரம் 36 முகாம்களும், மூன்றாவது வாரம் 38 முகாம்களும், நான்காவது வாரம் 38 முகாம்கள் என்று நடத்தப்பட்டுள்ளது. கடந்த வாரம் 57,000 மேற்பட்டவர்கள், அதற்கு முந்தைய வாரம் 55,000 மேற்பட்டவர்கள், அதற்கு முந்தைய வாரம் 48,000, அதற்கு முந்தைய வாரம் 44,000 என்கின்ற வகையில் கடந்த 4 முறை நடைபெற்று முடிந்திருக்கின்றன.

வரும் சனிக்கிழமை 37 இடங்களில் நடத்தப்படும். சென்னையைப் பொறுத்த வரை 15 முகாம்கள் திட்டமிடப்பட்டது. இங்கு ஒரு வாரம் இடைவெளி விட்டு முகாம்கள் நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முழுவதும் உள்ள 388 வட்டாரங்களில், ஒரு வட்டாரத்திற்கு 3 என்கின்ற விகிதத்திலும், 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தொகை கொண்ட மாநகராட்சிகளில் தலா 5 என்கின்ற எண்ணிக்கையிலும், 10 இலட்சத்திற்கும் குறைவான மக்கள் தொகை கொண்ட 19 மாநகராட்சிகளில் தலா 4 என்கின்ற வகைகளிலும், வட்டாரத்திற்கு 3 என்கின்ற வகைகளிலும், 1256 முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது.

அடுத்த வருடம் 2026 ஜனவரி மாதத்திற்குள் 1256 முகாம்களும் நடத்தப்படும் என்று மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மண்டல குழு தலைவர்கள் ஆர்.துரைராஜ் (அடையாறு) திரு.எம். கிருஷ்ணமூர்த்தி (கோடம்பாக்கம்), மாமன்ற உறுப்பினர் தா.மோகன்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தி.மு.கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலுடன், இந்து சமய அறநிலையத்துறையின் மூலும் குமரக்கோட்டம் சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் சார்பில், பொதுமக்களுக்கு இலவச திருமணம் செய்திடும் திட்டத்தின் கீழ், காஞ்சிபுரம் சட்டமன்ற உறுப்பினர் சி.வி.எம்.பி. எழிலரசன் (04.09.2025) 8 இணையருக்கு திருமணம் செய்து வைத்தார். உடன், மாவட்ட ஆட்சியர், 1–வது பகுதிக் கழக செயலாளர் கே. திலகர், செயல் அலுவலர், அறநிலையத்துறை அலுவலர்கள், அரசு அலுவலர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

கழகத் தலைவர் – முதல்வர் பிறந்த நாளை முன்னிட்டு

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் அன்னம் தரும் அமுதக் கரங்கள் திட்டம்!

அமைச்சர் பி.கே.சேகர்பாபு அறிவிப்பு!

சென்னை, செப். 6 மக்கள் முதல்வரின் மனிதநேய விழா சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20 முதல் 2026 பிப்ரவரி 19வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் நடைபெறும் காலை உணவு வழங்கும் “அன்னம் தரும் அமுத கரங்கள் திட்டம்” 06.09.2025 முதல் 18.09.2025 வரை நடைபெறும் இடங்களின் விவரத்தினை அமைச்சர் செயலாளர் பி.கே.சேகர்பாபு அறிவித்துள்ளார்.

அவரது அறிவிப்பு வருமாறு:

“அன்னம் தரும் அமுத கரங்கள்” கீழ்கண்ட நாட்களில் நடைபெறும் விவரம் பின்வருமாறு:

நாள் 6.9.2025 சனிக்கிழமை 199 ஆம் நாள் அம்பத்தூர் வடக்கு பகுதி

1) வட்டம் 79, காந்தி நெடுஞ்சாலை, CSI சர்ச் எதிரில். வட்ட செயலாளர் வே. ரவீந்திரன்

2) வட்டம் 79 அ, வெங்கடேஸ்வரா நகர் ஏரிகரை சாலை. வட்டசெயலாளர், பு.வீரா (எ) வீரராகவன்

நாள் 7.9.2025 ஞாயிற்றுக்கிழமை 200 வது நாள் கொளத்தூர் மேற்கு பகுதி

1) வட்டம் 65 அ, நேரு தெரு, தென் பழநி நகர், வட்ட செயலாளர் N.பவுல் ராஜ்

2) வட்டம் 64, சீனிவாசன் நகர் மெயின் ரோடு, டான் பாஸ்கோ பள்ளி அருகில் வட்ட செயலாளர் S. முருகன்

நாள்8.9.2025திங்கட்கிழமை 201ஆம் நாள் வில்லிவாக்கம் மேற்கு பகுதி

1) வட்டம் 94 ஆ, ராஜமங்களம், வில்லிவாக்கம் செயலாளர் க.சுகுமாரன்.

2) வட்டம் 94 சிட்கோ நகர் வில்லிவாக்கம், வட்ட செயலாளர் சிட்கோ சேகர்

நாள் 9.9.2025 செவ்வாய்க்கிழமை 202 ஆம் நாள் துறைமுகம் தொகுதி

1) துறைமுகம் கிழக்கு பகுதி, வட்டம் 60 அ, அன்னை சத்யா நகர், பி.சி பகுதி வட்ட செயலாளர் ஆ.நா பார்த்திபன் 2) துறைமுகம் மேற்கு பகுதி, வட்டம் 54 பி. கே.ஜி தெருவில், நான்காவது சந்து அண்ணா பிள்ளைத்தெரு, வட்ட செயலாளர் பா. கதிரவன்

நாள் 10.9.2025 புதன்கிழமை 203ஆம் நாள் அம்பத்தூர் தெற்கு பகுதி

1) வட்டம் 93 முகப்பேர் கிழக்கு, பஜார் சாலை, (முகப்பேர் தீயணைப்பு நிலையம் அருகில்) வட்ட செயலாளர் இரா.டீக்கா. 2) வட்டம் 89, கழக கட்சி அலுவலகம், டிவிஎஸ் காலனி பிரதான சாலை, சென்னை பப்ளிக் ஸ்கூல் அருகில் வட்ட செயலாளர் M.E சேகர் எம்.சி,

நாள் 11.9.2025 வியாழக்கிழமை 204ஆம் நாள் திரு. வி.க.நகர் வடக்கு பகுதி

1) வட்டம் 71, மாதவரம் நெடுஞ்சாலை, (கன்னபிரான் கோயில் தெரு அருகில்), பெரம்பூர், சென்னை. வட்ட கழக செயலாளர் பரிமள சுரேஷ்பாபு 2) வட்டம் 74அ, சந்திரயோகி சமாதி சாலை (போலீஸ் பூத் அருகில்), சென்னை. வட்ட கழக செயலாளர் G.கிருஷ்ணகுமார்.

நாள் 12.9.25 வெள்ளிக்கிழமை 205ஆம் நாள் திரு. வி.க நகர் தெற்கு பகுதி

1) வட்டம் 75 மேட வாக்கம் இரண்டாவது தெரு, கீழ்ப்பாக்கம்

வட்ட செயலாளர் வி. கா வெங்கடேசன் 2) வட்டம் 76 அ, சி. எஸ் நகர் குடியிருப்பு, டோபிகானா, பட்டாளம். வட்ட செயலாளர் எஸ். வெங்கடேசன்

நாள் 13.9.2025 சனிக்கிழமை 206ஆம் நாள் கொளத்தூர் கிழக்கு பகுதி

1) வட்டம் 70 அ, சத்யா நகர், அயன்புரம் பஸ் நிலையம் அருகில்

வட்ட செயலாளர் D.சந்திரசேகர் 2) வட்டம் 67 மல்லிப்பூ நகர், தீட்டி தோட்டம் அருகில். வட்ட செயலாளர் N.பொன்முடி

நாள் 14.9.2025 ஞாயிற்றுக்கிழமை 207 ஆம் நாள் வில்லிவாக்கம் கிழக்கு பகுதி

1) வட்டம் 97 வெள்ளாளர் தெரு, பரசுராம ஈஸ்வரர் கோயில் மேற்கு மாட வீதி சந்திப்பு கங்கையம்மன் கோயில் தெரு, வட்ட செயலாளர் விக்னேஷ் சீனிவாசன்

2) வட்டம் 97 அ குப்புசாமி நகர், பாளையம் பிள்ளை நகர் சந்திப்பு, வட்ட செயலாளர் ச. மனோகரன்

நாள் 15.9.2025 திங்கட்கிழமை 208ஆம் நாள் எழும்பூர் வடக்கு பகுதி

1) வட்டம் 77 அ சிவராவ் ரோடு, பட்டாளம். வட்ட செயலாளர் வி. அபாய்

2) வட்டம் 78 அ வி. வி கோயில் தெரு, சூளை வட்ட செயலாளர் ந. பாலு

நாள் 16.9.2025 செவ்வாய்க்கிழமை 209 ஆம் நாள் அம்பத்தூர் கிழக்கு பகுதி

1) வட்டம் 84ஆ, கங்கை அம்மன் கோயில் தெரு, கொரட்டூர்.

வட்ட செயலாளர் த.வ. லால் 2) வட்டம் 84, கொரட்டூர் பேருந்து நிலையம் அருகில்,

வட்ட செயலாளர் மூ. விஜயகுமார்

நாள் 17.9.2025 புதன்கிழமை 210 ஆம் நாள் எழும்பூர் தெற்கு பகுதி

1) வட்டம் 61, தமிழ் சாலை, குழந்தைகள் நல மருத்துவமனை அருகில்

வட்ட செயலாளர் S. டால்பின் ஹரி 2) வட்டம் 61 அ, எழும்பூர் ரயில் நிலையம் அருகில், தகவல் தொழில்நுட்ப அணி, J. மொஹிந்தர் அமர்நாத்

நாள் 18.9.2025 வியாழக்கிழமை 211 ஆம் நாள் துறைமுகம் தொகுதி

1) துறைமுகம் கிழக்கு பகுதி, வட்டம் 56, பிடாரியார் கோயில் தெரு, சகாய மாதா அருகில் வட்ட செயலாளர் த. கதிரவன் (எ) ராஜா 2) துறைமுகம் மேற்கு பகுதி, வட்டம் 54 ஆ சுந்தர முதலி தெரு, அம்மன் கோயில் வட்ட செயலாளர் ஆர். ரவிச்சந்திரன்

மேற்கண்ட காலை உணவு வழங்கும் நிகழ்ச்சியில் திட்ட ஒருங்கிணைப்பாளர்களாக சொ.வேலு, S.முரளி, R. ராஜன், K.R.அபரஞ்சி, அசோக் ஜெயின், P.விஜய குமார், ம.அசோக்குமார், L.சம்பத்குமார், க.பா.பிரதீப் குமார் செயல்படுவார்கள்.

இவ்வாறு மாவட்டச் செயலாளர் பி.கே.சேகர் பாபு அறிவித்துள்ளார்.

உடல் உறுப்பு தானம் செய்த

500-வது கொடையாளருக்கு அரசு மரியாதை செலுத்தப்பட்டது!

அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – ஆவடி சா.மு.நாசர் மலர்வளையம் வைத்து மரியாதை!

திருவள்ளூர், செப் 6- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் மற்றும் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு. நாசர் ஆகியோர் நேற்று முன்தினம் (04.09.2025) திருவள்ளூர் மாவட்டம் ஆவடி வட்டம், மோரை, புதிய கண்ணியம்மன் நகர் பகுதியைச் சேர்ந்த டி.செல்லப்பன் வயது 53 என்பவர் கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் மூளைச்சாவடைந்து உடல் உறுப்பு தானம் செய்த 500-வது கொடையாளருக்கு அரசு மரியாதை செலுத்துவதற்காக நேரில் மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தி, குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தனர்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் கூறியதாவது,

தமிழ்நாட்டில் மூளைச்சாவு அடைந்தவர்களிடத்திலிருந்து உடல் உறுப்புகளை தானமாக பெற்று, அவற்றின் மூலம் பல நூற்றுக்கணக்கான உயிர்கள் காப்பற்றப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகிறது. அத்தகைய உடல் உறுப்பு தானம் செய்பவர்களுக்கு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் 2023 செப்டம்பர் திங்கள் 23 ஒரு சிறப்பு அறிவிப்பு வெளியிட்டார். அதன்படி மூளைச்சாவு அடைந்து உடலுறுப்பு தானம் செய்பவர்களாக இருக்கிறார்களோ அவர்களுக்கு அரசு மரியாதை செலுத்தப்படும் என்று அறிவித்தார்கள். முதல் கொடையாளியாக 2023 தேனி மாவட்டம் சின்னமனூர் முதல் அரசு மரியாதை செய்து இந்த திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. தொடர்ந்து தமிழ் நாட்டில் ஏற்பட்ட விழிப்புணர்வின் காரணமாக இந்த மூளைச் சாவு அடைந்தவர்களிடமிருந்து உடல் உறுப்புகள் தனமாக தருவது என்பது உயர்ந்து கொண்டிருக்கிறது. அதனால் பலர் நூற்றுக்கணக்கான மனித உயிர்கள் காப்பாற்றப்பட்டு வருகிறது.

தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும் தமிழ்நாட்டிற்கு இந்திய அளவில் முதல் மாநிலம் என்கின்ற வகையில் இந்த உடல் உறுப்பு தானத்திற்கு சிறந்த மாநிலத்திற்கான விருதும் கிடைக்கப் பெற்று வருகிறது இன்றைக்கு ஆவடி பகுதியைச் சேர்ந்த மாதாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மோரை பகுதியிலுள்ள செல்லப்பன் அவர்கள் வயது 53 மூளையில் ரத்தக்கசிவு ஏற்பட்டு சென்னை கே.எம்.சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சிகிச்சை பெற்று வந்தார் சிகிச்சை பலனின்றி இன்று உயிரிழந்த உள்ளார், நீரழிவு மற்றும் உயர் ரத்த நோய்களினால் பாதிக்கப்பட்டவர் இன்றைக்கு நம்மிடையே இல்லை என்றாலும் அவருடைய குடும்பத்தார் அவருடைய உடல் உறுப்புகளை தானமாக தந்திருக்கிறார்கள். செல்லப்பன் அவர்களுடைய திரு உடலுக்கு அரசின் சார்பில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ்.சுதர்சனம் அவர்கள் மக்கள் நல்வாழ்வுத் துறையை சேர்ந்த ஆணையத்தின் அதிகாரிகள் உயர் மருத்துவர்கள் அவருடைய உடலுக்கு அரசு மரியாதை செலுத்தி இருக்கிறோம். இந்த திட்டத்தை பொறுத்தவரை முத்தமிழர் அறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது இந்த திட்டத்தை தொடங்கி 2008 ஆம் ஆண்டு தொடங்கினார்கள். தொடர்ந்து இன்றைக்கு ஏராளமான பேர் இதன் மூலம் பயன்பெற்று வருகிறார்கள் இந்த திட்டம் தொடங்கப்பட்ட நாள் முதல் இதுவரை 2,230 பேர் உடல் உறுப்பு தானம் செய்திருக்கிறார்கள் 2230 என்பது 2008 தொடங்கி இந்த ஆண்டு வரை ஆனால் அரசு மறையது என்று தொடங்கியதற்கு பிறகு நான்கில் ஒரு பகுதி பேர் இந்த இரண்டு ஆண்டுகளிலேயே உடல் உறுப்பு தானம் செய்து பலருக்கு வாழ்வு அளித்துள்ளனர். மரியாதைக்குரிய திரு செல்லப்பன் அவர்கள் உடலுக்கு இன்றைக்கு அரசின் சார்பில் மரியாதை செலுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் கூறினார்.

இந்நிகழ்வின்போது, மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப், மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ். சுதர்சனம், மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொ) மரு. தேரனி ராஜன், உடல் உறுப்பு மாற்று ஆணையத்தின் உறுப்பினர் செயலாளர் மரு.கோபாலகிருஷ்ணன், கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவ கல்லூரி முதல்வர் மரு. கவிதா, மாவட்ட சுகாதார அலுவலர்கள் மரு. பிரியா ராஜ் (திருவள்ளூர்), மரு. பிரபாகரன் (பூவிருந்தவல்லி), திருவள்ளுவர் வருவாய் கோட்டாட்சியர் ரவிச்சந்திரன், ஆவடி வட்டாட்சியர் கண்ணன் மற்றும் அரசு அலுவலர்கள் பங்கேற்றனர்.